செய்தி வெளியீடு எண்: 23 நாள்: 13.07.2021

**தேனி மாவட்டம்**

**ஆதிதிராவிடர், பழங்குடியினர் இன மக்கள், தூய்மைப் பணியாளர்கள் மற்றும் அனைத்து நலக்குழு உறுப்பினர்கள் ஆகியோர்களிடம் குறை கேட்கும் கூட்டம் - தேசிய தூய்மை பணியாளர் ஆணைய குழுவின் தலைவர் மாண்புமிகு திரு. எம்.வெங்கடேசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

*****

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், ஆதிதிராவிடர், பழங்குடியினர் இன மக்கள், தூய்மைப் பணியாளர்கள் மற்றும் அனைத்து நலக்குழு உறுப்பினர்கள் ஆகியோர்களிடம் குறை கேட்கும் கூட்டம் இன்று (13.07.2021) தேசிய தூய்மை பணியாளர் ஆணைய குழுவின் தலைவர் மாண்புமிகு திரு. எம்.வெங்கடேசன் அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. க.வீ.முரளீதரன், இ.ஆ.ப. அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், தேனி மாவட்டத்தில் உள்ள 6 நகராட்சிகள், 8 ஊராட்சி ஒன்றியங்கள், 22 பேரூராட்சிகள், 130 கிராம ஊராட்சிகள், தாட்கோ, ஆதிதிராவிடர் நலத்துறை, கல்வித்துறை உள்ளிட்ட துறைகளின் கீழ் பணிபுரியும் நிரந்தர தூய்மைப் பணியாளர்களின் எண்ணிக்கை, ஒப்பந்த தூய்மைப் பணியாளர்களின் எண்ணிக்கை, தினக்கூலி தூய்மைப் பணியாளர்களின் எண்ணிக்கை, பணிநிரந்தரம் செய்ய தகுதியான நபர்களின் எண்ணிக்கை ஆகியன குறித்தும், அவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் ஊதியம், மருத்துவ வசதிகள், அவர்களின் குழந்தைகளுக்கு வழங்கப்படும் கல்வி மற்றும் கடனுதவி போன்றவை குறித்து நேரடியாக கண்காணிப்புக்குழு உறுப்பினர்களிடமும், பணியாளர்களிடமும், சங்கங்களின் பிரநிதிகளிடமும் கேட்டறிந்தபின், தேசிய தூய்மை பணியாளர் ஆணைய குழுவின் மாண்புமிகு தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:-

தேனி மாவட்டத்தில் ஆதிதிராவிடர், பழங்குடியினர் இன மக்கள், தூய்மைப் பணியாளர்களின் நலனிற்காக அரசு எண்ணற்ற திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறது. அதனடிப்படையில், அவர்களுக்கு தேவையான குடியிருப்பு, குடியிருப்பிற்கான பராமரிப்பு நிதியுதவி, அனைத்து தூய்மைப் பணியாளர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு கல்வி வழங்குதல், மருத்துவ வசதி வழங்குதல் உள்ளீட்ட பல்வேறு திட்டங்களின் கீழ் அவர்களை பயன்பெறச் செய்து வருகிறது. இத்திட்டங்களை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, உள்ளாட்சித்துறைகள், தாட்கோ, பள்ளிக்கல்வித்துறை, மாவட்ட முன்னோடி வங்கி போன்ற துறைகளின் வாயிலாக சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், நிரந்தர தூய்மைப் பணியாளர்களுக்கு அரசு நிர்ணயித்த ஊதியத்தினை நேரடியாக அவர்களின் வங்கி கணக்கில் செலுத்திடவும், ஒப்பந்த தூய்மைப் பணியாளர்களுக்கான ஊதியத்தினை ஒப்பந்ததாரர்கள் மூலம் வழங்கப்படுவதை சரிவர கண்காணித்து உறுதி செய்திடவும், தூய்மைப் பணியாளர்களின் பணிக்குத் தேவையான சீருடைகள், கையுறைகள், காலணிகள் உள்ளிட்ட உபகரணங்களை தொடர்ச்சியாகவும், சரிவர வழங்கிடவும், குறிப்பாக கொரோனா காலகட்டத்தினை கருத்தில் கொண்டு, பாதுகாப்பான முறையில், உரிய உபகரணங்கள் அணிந்து பணிகள் மேற்கொள்ள, சம்பந்தப்பட்ட துறை சார்ந்த அலுவலர்களால் அறிவுறுத்தப்பட வேண்டும்.

அரசின் நலத்திட்ட உதவிகளை தூய்மைப் பணியாளர்கள் பெறுவதற்கு தேவையான விழிப்புணர்வை ஏற்படுத்தி, பணியாளர்களின் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் பயன்பெறத்தக்க வகையில், கடன் வழங்குவதற்கான விண்ணப்பங்களை பெற்று, கடனுதவிகளை வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். Safai Karamcharis Financial Corporation மூலமாக கடனுதவி வழங்கிட, மாவட்ட நிர்வாகம் மூலம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். எந்தவொரு சூழ்நிலையிலும் தூய்மைப் பணியாளர்கள் மனித கழிவுகளை அகற்றுவதில் ஈடுபடக் கூடாது. பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் பகுதிகளில், சுத்தம் செய்யும் பணிகளுக்கு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ், ரோபோ இயந்திரங்கள் பயன்படுத்துவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும்.

தூய்மைப் பணியாளர்களுக்கான அனைத்து திட்டங்களையும் அலுவலர்கள் முறையாக செயல்படுத்திட வேண்டும். அவர்களுக்கு வழங்கப்படும் ஊதிய முறைகள், பணி ஓய்வுக்குரிய பணபலன் ஆகியவைகளை எந்தவித காலதாமதமுமின்றி சரிவர வழங்கிடவும், அவர்கள் வசித்து வரும் இடங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்திடவும், பணி புரியும் காலமுறைக்கேற்ப சம்பள உயர்வு வழங்கிடவும், ஒவ்வொரு மாதமும் வழங்கப்படும் சம்பளம் தொடர்பான விபரங்களை அவர்களுக்கு தெரிவிக்கவும், அவ்வபோது அவர்களுக்கென மருத்துவ முகாம்கள் நடத்திடவும், குடியிருப்பு அல்லாதவர்களுக்கு குடியிருப்பு வசதி ஏற்படுத்தி தருவது குறித்தும், பணியின்போது இறப்பு ஏற்பட்ட நபர்களுக்கு உரிய நிவாரணத்தொகை வழங்குவதற்கும் சம்பந்தப்பட்ட துறைச் சார்ந்த அலுவலர்கள் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

ஆதிதிராவிடர், பழங்குடியினர் இன மக்கள், தூய்மைப் பணியாளர்களின் நலனிற்காக அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்களின் கீழ் தகுதியான நபர்களை பயன்பெறச்செய்து, அதற்குரிய பலன்களை உடனடியாக கிடைக்கப்பெற செய்யும் வகையில், துறை சார்ந்த அலுவலர்கள் பணிகள் மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து, இக்கூட்டத்தில் ஆதிதிராவிடர், பழங்குடியினர் இன மக்கள், தூய்மைப் பணியாளர்கள் மற்றும் அனைத்து நலக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் பல்வேறு கோரிக்கைகள் குறித்து, தேசிய தூய்மை பணியாளர் ஆணைய குழுவின் மாண்புமிகு தலைவர் அவர்களிடம் எடுத்துரைத்தனர். அக்கோரிக்கைகள் தொடர்பாக இக்கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த அத்துறை சார்ந்த அலுவலர்களிடம் உரிய விளக்கத்தினை கேட்டறிந்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தினார். மேலும் மனுக்களாக வழங்கப்பட்ட கோரிக்கைகள் மீதும், உரிய பரிசீலனை மேற்கொண்டு, தகுதியான கோரிக்கைகளின் மீது உடன் நடவடிக்கைகள் மேற்கொள்ள துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிரவிண் உமேஷ் டோங்கரே, இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் க.ரமேஷ், பெரியகுளம் சார் ஆட்சியர் செ.ஆ.ரிஷப், இ.ஆ.ப., உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் செல்வி பி.கௌசல்யா, திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) ஆர்.மணி, முதல்வர் (அரசு மருத்துமனை, மருத்துவக்கல்லூரி) மரு.பாலாஜிநாதன், இணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.லட்சுமணன், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அண்ணாதுரை, உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) காளியப்பன், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் க.செல்வராஜ், நகராட்சி ஆணையாளர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், பேரூராட்சி செயல் அலுவலர்கள், துப்புரவு பணியாளர்கள், துப்புரவு பணியாளர்களின் சங்க பிரதிநிதிகள் மற்றும் அரசுத்துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**